# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி : www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.199 /பேரூ/2023
நாள்: 03.08.2023

திரு. எம். தினேஷ்,
மணலூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம் .... மனுதாரர்

செயல் அலுவலர்,
மணலூர்பேட்டை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம். .... எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், மணலூர்பேட்டை கதவு எண் 18, சேனியர்வீதி என்ற முகவரியைச் சேர்ந்த மனுதாரர் திரு எம். தினேஷ் என்பவரது 30.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.07.2023 அன்று பெறப்பட்டு, 199/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், மணலூர்பேட்டை கதவு எண்.18, சேனியர்வீதி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. எம். தினேஷ் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சி சேனியர்வீதியில் உள்ள தேவி திருமண மண்டபத்தில் முகூர்த்த தினங்களில் நடக்கும்

விசேஷத்தின்போது வரும் வாகனங்கள் அனைவரின் வீட்டின் முன்பாக நிறுத்தப்படுகிறது. மேலும் இரவு நேரங்களில் மது குடித்துவிட்டு பலர் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். முறையான இடவசதி மற்றும் வாகன நிறுத்துமிடம் இல்லாமல் செயல்படும் திருமண மண்டபத்தின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் 29.10.2022 நாளிட்ட கடிதம் மூலம் புகார் அளித்தேன். இந்த புகார் மனு மீது மணலூர்பேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்னுடைய மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு உரிய அனுமதி மற்றும் வாகன நிறுத்துமிடம் இல்லாமல் செயல்படும் தேவி திருமண மண்டபத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்."

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விளக்க அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 18.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தமது 26.07.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட சேனியர் தெருவில் திரு.எம். சுந்தரமூர்த்தி என்பவருக்குச் சொந்தமான இடத்தில் சுமார் 20 ஆண்டுகாலமாக தேவி திருமண மண்டபம் இயங்கி வருகிறது. மேற்காணும் தேவி திருமண மண்டபத்தில் விசேஷ நாட்களில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடைஞ்சல்கள் ஏற்படுத்துகிறார்கள் என திரு. மு. தினேஷ் என்பவரால் கடந்த 29.10.2022 நாளிட்ட புகார் மனு மாவட்ட ஆட்சித் தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதின்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் கடிதம் ந.க. 21316/2022–12 நாள் 21.12.2022 –ன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன் பேரில் மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க. எண். 38/2023, நாள் 13.01.2023, 31.05.2023 மற்றும் 18.07.2023 ஆகிய தேதிகளில் அனுப்பி வைக்கப்பட்ட அறிவிப்பு நோட்டீஸ்களில் மேற்காணும் மண்டபத்தில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி, அதன் அடிப்படையில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடைஞ்சல்கள் ஏற்படாவண்ணம் விரைவில் சரிசெய்திட அறிவுறுத்தப்பட்டது.

மேற்காணும் அறிவிப்புகளை பெற்றுக் கொண்ட தேவி திருமண மண்டபத்தின் உரிமையாளர் திரு.என். சுந்தரமூர்த்தி என்பவர் தனது 24.07.2023 நாளிட்ட கடிதத்தில் மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்ட தேவி திருமண மண்டபத்தில் உள்ள குறைகளை பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடைஞ்சல்கள் இல்லாமல் 90 நாட்கள் கால அவகாசத்திற்குள் சரிசெய்து விடுகிறேன் என உத்தரவாதம் அளிக்கப்பட்டு, அவ்வாறு உரிய காலக்கெடுவிற்குள் குறைகளை நிவர்த்தி செய்ய இயலவில்லையெனில், மேற்காணும் மண்டபத்தினை நிரந்தமாக மூடிவிடுகிறேன் எனவும் திருமண மண்டபத்தின் உரிமையாளரால் எழுத்துபூர்வமாக கடிதம் பெறப்பட்டு உரிய தொடர் நடவடிக்கையில் உள்ளது என இதன் மூலம் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

4) மனுதாரருக்கும் மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கும் 26.07.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.07.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 26.07.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சியில் சேனியர் சாலையில் அமைந்துள்ள தேவி திருமண மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் பொதுமக்கள் தங்களது வாகனங்களை மேற்கண்ட மண்டபத்திற்கு எதிரில் உள்ள எங்களது வீடுகளுக்கு முன்பாக நிறுத்துவதால் எங்களுக்கு இடைஞ்சலாக உள்ளது மட்டுமல்லாமல் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் திருமண மண்டபத்திற்கு வரும் நபர்கள் இரவில் எங்களது குடியிருப்புகளின் வாயிற்படியில் அமர்ந்து மது அருந்தி கூச்சலிடுவதால் எங்கள் குடியிருப்பு பகுதியிலுள்ள குழந்தைகள் மற்றும் பெண்கள் பாதிக்கப்பட்டு அவர்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்ட வாகன நிறுத்தம் இல்லாத மண்டபத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், அம்மண்டபத்திற்கு வரும் வாகனங்களை வேறு இடத்தில் நிறுத்திடவும் ஆவன செய்யுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

6) மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் 26.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மனுதாரர் திரு. M. தினேஷ் என்பவரின் முறையீட்டு மனு பேரூராட்சியால் பெறப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடம் ஆய்வு செய்யப்பட்டது. மணலூர்பேட்டை பேரூராட்சி சேனியர் தெருவில் அமைந்துள்ள தேவி திருமண மண்டபம் 30 ஆண்டுகளுக்கு முற்பட்டது. அம்மண்டபத்திற்கு வரைபட அனுமதி இல்லை. அம்மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வோரின் வாகனங்கள் மண்டபத்தினுள் நிறுத்த வழியில்லாததால், மண்டபத்தின் வெளியேயும், மனுதாரரின் வீட்டின் எதிரிலும் நிறுத்தப்பட்டு வருவதைத் தொடர்ந்து, மேற்படி திருமண மண்பத்தின் கட்டட உரிமையாளரிடம் மண்டபத்தில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி, பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படாவண்ணம் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு பேரூராட்சி மூலம் 13.01.2023, 31.05.2023 மற்றும் 18.07.2023 ஆகிய நாளிட்ட அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. இதனைத் தொடர்ந்து கட்டட உரிமையாளர் பேரூராட்சிக்கு அளித்துள்ள தனது 24.07.2023 நாளிட்ட கடிதத்தில், திருமண மண்டபம் குறித்த குறைகள் 90 நாட்களுக்குள் களையப்படும் எனவும் அவ்வாறு இல்லையெனில், மண்டபத்தை மூடிவிடுவதாகவும் தெரிவித்துள்ளார் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்து அதன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனது 26.07.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டையைச் சார்ந்த மனுதாரர் திரு. எம். தினேஷ் என்பவர் தனது 30.06.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட சேனியர் வீதியில் அமைந்துள்ள தேவி திருமண மண்டபத்தில் முறையான வாகன நிறுத்துமிடம் இல்லாததால், அம்மண்டபத்திற்கு வருகைபுரிபவர்கள் மனுதாரரின் குடியிருப்பு முன்பாக வாகனங்களை நிறுத்தியும் மேலும் இரவு நேரங்களில் மது அருந்தி இடையூறு செய்வதால் மிகுந்த மனஉளைச்சல் ஏற்படுவதாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மேற்காணும் புகாரினைத் தொடர்ந்து மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் 3 அறிவிப்புகள் மூலம் திருமண மண்டபத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தி உள்ளார்யொழிய, திருமண மண்டபமானது நகர் ஊரமைப்புத் துறையின் வரைபட அனுமதி பெறப்பட்டுள்ளதா மற்றும் பேரூராட்சியில் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலினை செய்து சட்ட விதிகளுக்கு உட்பட்டு கட்டடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்யாத மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

திருமண மண்டபத்திற்கு வரும் வாகனங்கள் அப்பகுதியில் குடியிருப்போர்களின் வீடுகளுக்கு முன்பாக நிறுத்தப்படுவதால், அப்பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கும், சாலைகளில் நடந்து செல்லும் பாதசாரிகளுக்கும் மற்றும் அவ்வழியாக செல்லும் வாகனப் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது என்பதும் அதனால் பெரும் விபத்துகளும் ஏற்படும் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

எனவே, மேற்காணும் தேவி திருமண மண்டப கட்டடமானது, நகர் ஊரமைப்புத்துறையால் வழங்கப்பட்ட வரைப்படத்தின்படியும் மற்றும் பேரூராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதியுடன் கட்டப்பட்டுள்ளதை உறுதிசெய்து அவ்வாறு இல்லாமல் அனுமதியின்றி கட்டடம் கட்டப்பட்டிருப்பின் நகர் ஊரமைப்புச் சட்டத்தின்படி LOCK AND SEAL அறிவிப்பினை உரிய காலத்திற்குள் கட்டட உரிமையாளருக்கு வழங்கி, உரிய விதிகளின்கீழ் சட்டபூர்வமான நடவடிக்கையினை மேற்கொண்டு அதன் அறிக்கையினை இம்முறை மன்றத்திற்கு 2 மாதகாலத்திற்குள் அனுப்பி வைக்குமாறு மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Director of Town Panchayats is directed to initiate disciplinary action against the Executive Officers concerned, who have defaulted in taking action as per the Town and Country Planning Act against the Building Management. It is shocking that the Kalyana Mandapam has given a deadline for compliance with

parking arrangements for the vehicles coming to the premises but parked indiscriminately in a hephazard manner in front of the houses of the area posing traffic hazard and avoidable inconvenience to the local residents. Such indifference and laziness on the part of the Town Panchayat Officials are censured by the Forum.

2023–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 03 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1) திரு. எம். தினேஷ்,
18, சேனியர்வீதி,
மணலூர்பேட்டை அஞ்சல்
திருக்கோவிலூர் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்

2) செயல் அலுவலர்,
மணலூர்பேட்டை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4)இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர்
(Nodal Officer)(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்